முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.03.2024**, சனிக்கிழமை

1. மனுகுலம் காக்க அவதரித்த
மாதவசி ஆறுமுக அரங்கனே
ஞானபலம் உலகோர் அடைய
ஞானியாக வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சால் திங்கள்
அச்சமற மூவாறோர்திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 19 ம் நாள், 02.03.2024, சனிக்கிழமை)
3. வாரமதில் திருநாவுக்கரசர் யானும்
வழங்குவேன் உலகம் நலமுற
சோரமிலா ஞானப் படைகளை
செகத்தில் நிறுவிட அருளும்
4. அருளும் அரங்கன் தவ வலிமை
ஆற்றல் மிக்க தரும வலிமை
வரமாக உலகமக்கள் ஏற்று
வணங்கி சரணடைவு காண
5. காணவே கலியில் இருக்கின்ற
கட்டங்கள் தெரியாதபடி
ஞானபலம் தானபலமென
ஞானிகளின் துணை பெருகி
6. பெருகியே அவரவர் தனக்கும்
பேதமற சர்வ சூட்சுமங்களும்
முருகப் பெருமான் வெளிப்பட
முழுமையாக சித்தியாக விளங்கும்
7. விளங்கவே அரங்கன் வடிவில்
வேலவனே இறங்கி நன்கு
களங்கமற காட்சித் தர
காண்பவர் அனைவருமே இனி

8. இனி ஞானவான்கள் ஆகி
இதன்வழி பேருலகம் தனில்
கனிவேலவன் வழிபாட்டை
கட்டாய வழிபாடும் ஆக்கி

9. ஆக்கியே சரவணச் சுடர்
அகிலமெங்கும் வலம் வர
தேக்கமின்றி அரங்கன் படை
தேசமெங்கிலும் உருவாகி

10. உருவாகிச் சிறந்து பரந்து
உண்மை மிக்க ஆன்மீக
குருமார்கள் வழிகாட்ட ஞான
களம் அரசியல் களமாக்கி

11. ஆக்கியே ஞானத் தலைமையை
ஆற்றல்பட தேர்வு செய்துமே
ஊக்கமுடன் ஞான ஆட்சி
உலகம் கண்டடைய நேரும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—